

# எமது பிரதேசத்தின் பொதுச் சேவைகள்

06

இந்தப் பாட அலகின் வாயிலாக அரசாங்கத்தினூடாகவும் தனியார் துறையினூடாகவும் எமது பிரதேசங்களுக்கு வழங்கப்படும் பொதுச் சேவைகள் பற்றி கற்றுக் கொள்வதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். இவ்வாறான பொதுச் சேவைகள் உங்களது வாழ்க்கைக்கு மிகவும் பிரயோசனமாக அமைகின்றன. இதனால் இது தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

## 6.1 பொது சேவை அறிமுகம்

பாடசாலை மாணவர்களாகிய நீங்கள் இன்று பயன்படுத்திக் கொண்ட சேவை பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் நகரப் பிரதேசத்தில் அல்லது கிராமப் பிரதேசத்தில் வாழ்பவராக இருக்கலாம். கல்வி, சுகாதாரம், மின்சாரம், தொலைபேசி, போக்குவரத்து, குழாய்நீர் போன்ற பல்வேறு சேவைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ நீங்கள் இன்று பயன்படுத்தி இருப்பீர்கள். இன்றைய நாள் முடிவதற்கு முன் உங்களின் பல தேவைகளுக்காக இன்னும் பல சேவைகளைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படலாம். இச்சேவைகள் வழங்கப்படும் முறைகளின் அடிப்படையில் மூன்று பிரதான பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

- இலவசமாகப் பெற்றுக் கொள்ளும் சேவைகள்
- பணம் செலுத்திப் பெறப்படும் சேவைகள்
- சலுகை அடிப்படையில் பெறப்படும் சேவைகள்

இவ்வாறு பெறப்படும் சேவைகளை உங்கள் நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கும், எதிர்கால மனித வாழ்க்கையினை வெற்றி கரமானதாக்குவதற்கும் பயன்படுத்துவது பற்றிச் சிந்தித்துப்பாருங்கள்.

சமூகத்தில் வாழ்கின்ற அனைவரினதும் வாழ்க்கை நிலையினை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டு அரசாங்கம், மாகாண நிர்வாக சபை, அரச சார்பற்ற நிறுவனங்களினால் பொதுவாக வழங்கப்படுகின்ற சேவைகள் பொதுச் சேவைகள் எனப்படும்.



கல்விச் சேவை



போக்குவரத்துச் சேவை



சுகாதாரச் சேவை



தபாற் சேவை



மின்சாரம் வழங்கல்



நீர் வழங்கல்

**உரு 6.1 பல்வேறு பொதுச் சேவைகள்**

## 6.2 பொதுச் சேவைகளின் வளர்ச்சி

நதிக்கரையோரங்களை வாழ்விடமாகக் கொண்டு ஆரம்பித்த காலம் முதல் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அக்காலப் பொதுச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. கி.மு. 6ம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த ஆரியக்குழுவினர் மல்வத்து ஓயா, காலா ஓயா போன்ற ஆற்றங் கரையோரங் களில் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். சனத்தொகை, உணவுத் தேவைகள் என்பவற்றின் அதிகரிப்பு களினால் ஆற்றங்கரைக் குடியேற்றங்கள் பல்வேறு பிரதேசங்கள் நோக்கி நகர வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வாறான தேவைகளினால் மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகளுக்குப் போதிய மழைநீர் கிடைக்கவில்லை இவ்வாறு நீரினைப் பெற்றுக்கொள்ளும் பிரச்சினைக்கு மக்கள் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையினை நிவர்த்தி



**உரு 6.2 பராக்கிரம சமுத்திரம்**

செய்வதற்கு மக்கள் ஒன்றிணைந்து நீரைச் சேகரிக்கவும் விநியோகிப்பதற்கும் குளம், கால்வாய் போன்றவற்றைத் தோற்றுவித்தனர். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஆட்சியாளர்களின் ஆதரவு குறைவில்லாமல் கிடைக்கப்பெற்றது. உதாரணமாக அநுராதபுரக் காலத்தில் ஆட்சி செய்த மன்னன் மகாசேனன் (கி.மு. 276-303) விவசாயத்தினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு மின்னேரியாக் குளத்தினைக் கட்டுவித்தமையினால் அவன் மக்களால் ''மின்னேரியா தெய்வம்'' எனப் போற்றப்பட்டான்.

அதனைப் போலவே அனுராதபுரத்தின் புத்ததாச மன்னனின் ஆட்சி காலத்தில் 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியரை நியமித்து மக்களுக்கு வைத்திய சேவையினை பொதுச் சேவையாக வழங்கியுள்ளான்.

இவ்வைத்தியசாலைகளை நடாத்திச் சென்றதோடு மூலிகைத் தோட்டங்களை அமைக்கவும் மன்னர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1815 - 1948) போக்குவரத்து, தகவல் பரிமாற்றம், வங்கித்தொழில், காப்புறுதிச்சேவை போன்ற சேவைகளை ஆரம்பித்தனர். இச் சேவைகள் பெருத்தோட்டங்களின் அபிவிருத்திக்காகவும், நிர்வாகம், மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதனை நோக்கமாகக் கொண்டுமே மேற்கொள்ளப்பட்டன. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் மக்களின் சேமநலனை மேம்படுத்துவதற்காக இப்பொதுச் சேவைகளை ஆட்சிக்கு வரும் எல்லா அரசாங்கங்களும் மேற்கொண்டு வருகின்றன.

## 6.3 பொதுச் சேவைகளின் அடிப்படைப் பண்புகள்

- எல்லோருக்கும் பொதுவாகப் பெற்றுக்கொள்ள கூடியன.
- எல்லாப் பிரஜைகளாலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியவை.
- இலாபத்தினை விட பொதுமக்களுக்கு சேவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவன.
- வாழ்க்கை நிலையையும் தரத்தையும் மேன்மைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுபவை.
- குறைந்த வருமானம் பெறுவோருக்காக - விசேடமாக சகாயமாக மேற்கொள்ளப்படுபவை.
- தனி மனித அபிவிருத்தியோடு சமூக அபிவிருத்தியினைக் குறிக்கோளாகக் கொண்டவை.
- பொதுச் சேவைகளைத் துஷ்பிரயோகம் செய்தல், இச்சேவைகளுக்குத் தடைவிதித்தல் போன்றவற்றிலிருந்து சட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டவை

❖ சமூகத்தினைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டவை

❖ அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்பவை

இச்சேவைகளில் கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகள் அரசாங்கத்திடமிருந்து இலவசமாகக் கிடைக்கக் கூடியன. மின்சாரம், நீர், போன்ற சேவைகள் சேமநலனின் கீழ் கிடைக்கின்றன. இவ்வாறான சேவைகளை வழங்குவதற்கு அரசாங்கத்தால் அறவிடப்படும் வரி வருமானத்திலிருந்து கூடுதலான அளவு நிதி ஒதுக்கப்படுகின்றது.

## 6.4 பொதுச் சேவையின் அவசியம்

❖ மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக

❖ குறைந்த வருமானம் பெறுவோருக்கு உதவுவதற்காக

❖ பொதுச் சேவைகளிலிருந்து பெறப்படும் ஒரு சில சேவைகள் பிரஜைகளால் தனித்தனியே பெற்றுக்கொள்வது கடினமானதால்.

உதாரணம் :- மின்சாரம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு சேவைகள்

❖ பிரதேசத்துக்கு இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதற்காக.

❖ நாட்டின் பொருள் உற்பத்திகளைப் பகிர்த்தளித்தலுடன், வியாபாரம் போன்றவற்றை இலகுவாக்குவதற்காக.

❖ சமூகத்தினைக் கட்டிக்காப்பதற்காக.

❖ மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக.

## 6.5 பொதுச் சேவைகளின் பயன்பாடு

உங்கள் பிரதேசத்திற்குக் கிடைக்கப்பெறும் பொதுச் சேவைகள் எவையென அறிந்து கொள்வதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இனி அந்தப் பொதுச் சேவைகளிலிருந்து கிடைக்கப் பெறும் பயன்பாடுகளைப் பார்ப்போம்.

### ✶ நீர்

எல்லா உயிரினங்களும் உயிர்வாழ்வதற்கான பொக்கிஷம் நீராகும். உலகின் 70% நீரால் சூழப்பட்டிருந்தாலும் இதில் 1% வீதத்திற்குக் குறைந்ததே நன்னீராகும். இச் சிறிதளவு நீரும் பல்வேறு மனித நடவடிக்கைகள் காரணமாக மாசுபடுத்தபட்டு வருகின்றமை கவலைக்குரியது.

மேலும் வெப்பமான காலநிலை நிலவும் காலங்களில் நீரைப் பெற்றுக் கொள்வது பிரச்சினையானது என்பதனை நீங்கள் உங்கள் பிரதேசங்களின் அனுபவத்திலிருந்து அறிந்திருப்பீர்கள். இதன் காரணமாகச் சுத்தமான குடிநீரை வழங்குவதனைப் பொதுச் சேவையாக மேற்கொள்ளவேண்டியுள்ளது. மேலும் கைத்தொழில் உற்பத்திகளுக்கும் விவசாயத்திற்கும் நீர் அவசியமாகும்.

நீங்கள் வாழும் பிரதேசமானது வரண்ட வலயமாகக் காணப்பட்டால் அங்கு விவசாய நடவடிக்கைகளுக்கான போதுமான மழை வீழ்ச்சி கிடைக்காது. அப்பகுதிகளில் நீர்ப்பாசன மூலமாக நீரை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

### ✶ மின்சாரம்

2006 ஆம் ஆண்டு வரைக்கும் இலங்கையில் 78.1% வீடுகளுக்கு மாத்திரமே மின்சக்தி வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இந்த மின்சாரத்தை அனைவர்க்கும் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. வீடுகளுக்கு வெளிச்சம் வழங்குதல், இயந்திரசாதனங்களின் இயக்கம், கைத்தொழில் வியாபார நிலையங்கள், வீதி வெளிச்சம் வழங்கல், தொலைத்தொடர்பு சேவைகள் போன்றவைகளை மேற்கொள்வதற்காகப் பொதுச் சேவையினூடாகவே மின்சாரம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.



I வீடும் மின்சாரமும்



II வைத்தியசாலையும் மின்சாரமும்



III வியாபாரநிலையமும் மின்சாரமும்



IV கைத்தொழிற்சாலையும் மின்சாரமும்

உரு 6.3



**V. வீதியும் மின்சாரமும்**

### ✶ வைத்திய, சுகாதார சேவை



உரு 6.4 சிறுவர் மருத்துவமனை

தென் ஆசிய நாடுகளில் இலங்கையிலேயே சுகாதார வைத்திய சேவையானது மிக உயர்ந்த நிலையில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. சிசு மரண வீதமும் தாய் மரண வீதமும் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இதனால், போலியோ, யானைக்கால், மலேரியா, சயரோகம், அம்மை நோய்கள் போன்றவற்றைக் குறைந்த மட்டத்திற்குக் கொண்டு வர முடிந்துள்ளது.

**சுகாதார சேவை மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

- ❖ தொற்றுநோய்களிலிருந்து பாதுகாத்தல்.
- ❖ தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகள்
- ❖ போசாக்குத் திட்டத்தினை மேற்கொள்ளல்
- ❖ வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளல்
- ❖ தாய்மார் நலன் பேணல்
- ❖ நோய்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளைச் செய்தல்.
- ❖ சுகாதாரக் கல்வியினை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளல்.
- ❖ பாடசாலை மாணவர்களுக்குப் பற்சிகிச்சையினை மேற்கொள்ளல்.
- ❖ தாய் - சேய்க்காகக் குடும்ப சுகாதார வேலைத்திட்டங்களை நடாத்துதல்
- ❖ நோயாளிகளைப் பராமரித்தல்
- ❖ திடீர் விபத்துகளுக்குள்ளானவர்களுக்குச் சிகிச்சையளித்தல்.

உங்கள் பிரதேசத்தில் காணப்படும் வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயம் என்பவற்றினூடாக இவ்வாறான சேவைகள் உங்கள் பிரதேசத்திற்கு வழங்கப்படுகின்றன.

இலங்கையின் சுகாதார சேவை மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டாலும் ஒரு சில நோய்களைக் குணப்படுத்திக் கொள்ள முடியாமைக்கு மக்களுடைய பொறுப்பற்ற தன்மையே காரணமாகும். இப்பொறுப்பற்ற தன்மைக்கு பிரதான காரணங்களாவன மக்களுக்குச் சுகாதாரம் பற்றிய விளக்கமின்மை, சுகாதார முறைப்படி உணவினை உட்கொள்ளாமை, சீரான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளாமை என்பவனவேயாகும்.

### ✶ கல்விச் சேவை

நாட்டினை அபிவிருத்தி செய்யும் வழிமுறையோடு தனிப்பட்டவர்களின் திறமையை விருத்தி செய்வதும், அறிவுள்ள பிரஜைகளை உருவாக்குவதுமே கல்வியின் பிரதான நோக்கங்களாகும். மனிதர்களோடு நாட்டினையும் அபிவிருத்தி அடையச் செய்வதற்கு மிகவும் முக்கியமானது கல்வியாகும். கல்வியைப் பெறுவதென்பது சிறுவர்களின் உரிமையாகும்.அனைவரும் கல்வியைப் பெற்றுக்கொள்ள இச்சேவை வாய்ப்பளிக்கின்றது. இதற்காக எமது நாட்டில் 9709 பாடசாலைகள் (2006 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி) இயங்கி வருகின்றன. இவை தவிர பல பிரிவேனாக்களும், தனியார் பாடசாலைகளும் நாடு பூராவும் கொண்டு நடாத்தப்படுகின்றன. உயர்கல்விக்காகப் 15 பல்கலைக்கழகங்களும் ஆசிரியர்களுக்கான கல்வியைப் பெற்றுக் கொள்வற்குப் பல்வேறு கல்வி நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. பாடசாலைக் கல்வியினை நீங்கள் சிறப்பாக மேற்கொண்டால் அதன் பின் உங்களுக்கு உயர்கல்வி நிறுவனங்களின் ஊடாகக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்குப் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.



உரு 6.5 பாடசாலைக் கல்வி



உரு 6.6 பிரிவேனாக் கல்வி



உரு 6.7 பல்கலைக்கழகக் கல்வி



உரு 6.8 தொழிற் கல்வி

முன் பள்ளி மாணவர்களுக்காக (வயது 4-5) மாகாண நிர்வாகசபை, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், தனியார் அமைப்புகள் போன்றவை முன்பள்ளிக் கல்வி நிலையங்களை அமைத்துச் செயற்படுத்தி வருகின்றன.

## ✶ போக்குவரத்துச் சேவை

பொதுச் சேவையின் கீழ் போக்குவரத்துச் சேவையானது போக்குவரத்திற்காக நாடு பூராகவும் அனைத்து பிரதேசங்களிலும் நடைமுறைபடுத்தப் படுகின்றன. பாடசாலை செல்லவும் தொழிலுக்குச் செல்லவும் தனிப்பட்ட தேவைகளுக்காகவும் சுற்றுலா நடவடிக்கைகளுக்கும் போக்குவரத்துச் சேவை முக்கியமானது.



உரு 6.9 புகையிரதம்

பொருட்கள் கொண்டு செல்வதற்காகத் தொடரூந்து சேவையும் தனியார்துறையும் பங்களிப்பை வழங்கி வருகின்றன. இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கைப் புகையிரத சேவை, தனியார் பேரூந்து சேவை போன்றன போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன.



உரு 6.10 பாடசாலை சேவை பேரூந்து

பாடசாலை மாணவர்களுக்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையும் தனியார் பேரூந்து சேவையும் விசேட வசதிகளுடன் சேவைகளை வழங்குகின்றன. 'சிசு சரிய' என்ற பெயரில் விசேட பஸ்சேவை ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.



உரு 6.11 மாணவர் வீதி இலட்சினை

**போக்குவரத்துச் சேவையினைச் செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் விடயங்கள்.**

- ❖ வீதியை ஒழுங்கமைத்தலும், புதுப்பித்தலும்
- ❖ அதிவேக பாதைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- ❖ புதிய பேரூந்துகளைச் சேவைக்கு உட்படுத்தல்
- ❖ புதிய தொடரூந்துகளைச் சேவையில் இணைத்துக் கொள்ளல்
- ❖ தனியார் போக்குவரத்து சேவையினை அதிகரிப்பதற்காக மானியங்கள் வழங்குதல்.
- ❖ ஒருங்கிணைந்த நேர அட்டவணையின் அடிப்படையில் போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்.
- ❖ பயணிகளின் பாதுகாப்பைச் சட்ட ரீதியாக உறுதிப்படுத்தல்.

## ✶ தகவல் பரிமாற்ற சேவை

தகவல் பரிமாற்ற சேவையானது மனித வாழ்க்கைக்கும் அன்றாட செயற்பாடுகளுக்கும் அத்தியாவசியமான சேவையாக உள்ளது. உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தினருக்கோ தொலைவில் இருக்கின்ற உறவினர்கள், நண்பர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தகவல் பரிமாற்ற சேவையானது உதவி புரிகின்றது. அதனைப் போலவே வெளிநாட்டில் வேலை வாய்ப்பினைப் பெற்றுச் சென்றவர்களோடும் தொடர்பு கொள்ள முடிகின்றது. உங்கள் பிரதேசத்தின் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொருட்களை வேறு பிரதேசங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வியாபார நடவடிக்கைகளுக்கும் இந்தச் சேவை பயன்படுத்தப்படுகின்றது.

உங்கள் பிரதேசத்தில் காணப்படுகின்ற அரசாங்கத் தபாலகங்களின் மூலமாகவும், முகவர் தபாலகங்களின் மூலமாகவும் கடிதம் அனுப்புதல் மின்னஞ்சல் அனுப்புதல், தந்தி அனுப்புதல், தொலைபேசி வசதி, வெளிநாட்டுக் கடித வசதி போன்ற தொடர்பு வசதிகளைப் பெற்றுக் கொள்ள உங்களுக்கு முடியும். இதனைத் தவிர பல்வேறு நிறுவனங்களின் மூலமாகத் தொலைபேசிப் பெட்டிகள் அமைத்திருப்பதும் தொலைத்தொடர்பு நடவடிக்கைகளை இலகுவாகச் செய்து கொள்வதற்கு உதவியாக இருக்கின்றது. கையடக்கத் தொலைபேசிகள் போன்ற சேவைகள் தற்போது மிகவும் இலகுவாகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**✶ தகவல் பரிமாற்ற சேவையினூடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்**

- நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளல்
- பிரதேசங்களுக்கிடையிலான தொடர்பினை ஏற்படுத்தல்
- வெளிநாடுகளோடு தொடர்பினை விருத்தி செய்து கொள்ளல்
- வியாபார நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளல்
- சுற்றுலா நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தல்.



**செய்மதித் தொடர்பாடல்**



**கையடக்கத்தொலைபேசி**



**தொலைக்காட்சி**



**தொலைநகல் இயந்திரம்**




**தொலைபேசி**

**உரு 6.12 நவீன தொடர்பாடல் உபகரணங்கள்**

# 6.6 பொதுச் சேவையிலுள்ள நிறுவனங்களும் அதிகாரிகளும்


## ✶ நீர் வழங்கல் சேவை தொடர்பான நிறுவனங்களும் அதிகாரிகளும்

இலங்கையில் பெரும்பாலான இடங்களுக்குக் குடி நீர் வழங்கும் நடவடிக்கையினை மேற்கொள்வது நீர்ப்பாசன நீர்வழங்கல் சபையாகும். அவ்வாறே மாநகர சபைகளின் ஊடாக அந்த நகர சபைகளை உள்ளடக்கும் பிரதேசங்களுக்கு நீர் வழங்கப்படுகின்றது. நீர்ப்பாசனம் பற்றியும் நீர் வழங்கல் சபையின் பிரதேச அலுவலக அதிகாரிகளையும் ஏனைய அலுவலர்களையும் கொண்ட அமைப்பினை அறிந்துகொள்வது இவ்சேவையினைப் பயன்படுத்திக் கொள்ளும் உங்களுக்குப் பயனுடையதாக அமையும்.




## ✶ மின்சக்தி மற்றும் எரிபொருள் சேவை தொடர்பான நிறுவனங்களும் அதிகாரிகளும்


இலங்கையின் பெரும்பாலான பிரதேசங்களுக்கு மின்சாரத்தினை வழங்குவது இலங்கை மின்சார சபையாகும். இது தவிர இலங்கை மின்சார தனியார் நிறுவனமும் இச் சேவையினை வழங்கி வருகின்றது. இலங்கை மின்சார சபை பிரதேச பொறியியலாளர் அலுவலக அமைப்பும் பணிக்குழுவும் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.



## ✶ சுகாதார சேவை மற்றும் அது தொடர்பான நிறுவனங்களும் அதிகாரிகளும்

சுகாதார சேவை தொடர்பாக அனேக நிறுவனங்கள் முழு நாட்டிற்கும் சேவை வழங்கி வருகின்றன. கொழும்புத் தேசியவைத்தியசாலை, போதனா வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள், மாவட்ட வைத்திய சாலைகள், சுகாதார சேவை அலுவலகங்கள் (MOH), தொற்று நோய்த் தடுப்புப் பிரிவுகள், பரிசோதனை நிலையங்கள், தோட்டச் சுகாதார மத்திய நிலையங்கள் பலவும் சேவையாற்றுகின்றன. நீங்கள் வாழும் பிரதேசத்தின் மக்கள் இந்த நிறுவனங்களூடாக இச்சேவையினைப் பெற்றுக் கொள்வதனை அறிந்திருப்பீர்கள்.

இந் நிறுவனங்களில் மாவட்ட வைத்தியசாலை நிர்வாக அமைப்பினைக் கீழ் வரும் அட்டவணையில் அறிந்து கொள்க.





சுகாதார வைத்திய அலுவலர் அலுவலகத்தின் ஊடாக பல்வேறு சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. தொற்று நோய் கட்டுப்படுத்தல், சுகாதாரக் கல்வி, தாய்- சேய் பராமரிப்பு ஆலோசனை, குடும்ப நலத்திட்ட நடவடிக்கைகள், பல்வைத்தியம், பாடசாலைச் சுகாதார வேலைத்திட்டங்கள் போன்ற பல்வேறு சேவைகள் இந்த அலுவலகங்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

சுகாதார வைத்திய அதிகாரி, மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி, தாதிச் சேவை அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பல் வைத்திய அதிகாரி, குடும்பச் சுகாதார சேவையாளர் போன்ற சேவையாளர்கள் சுகாதார வைத்திய அலுவலர் அலுவலகங்களின் கீழ்ச் சேவையாற்றுபவர்களாவர். உங்கள் பிரதேசத்தில் சுகாதார சேவை நலனுக்காக ஆயுர்வேத வைத்திய சாலையும், மருத்துவநிலையங்களும் உள்ளதென்பதை அறிவீர்கள். நோயைச் சுகப்படுத்துவதற்கு இந்த நிறுவனங்களினூடாக சேவைகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறான மருந்தகங்கள் அல்லது வைத்திய சேவைகளைப் பற்றித் தேடி அறிந்து கொள்ளுங்கள்.

### ✶ கல்விச்சேவையோடு தொடர்புடைய நிறுவனங்களும் அதிகாரிகளும்


பாடசாலை உங்களுடைய பிரதேசத்தில் கல்விச் சேவையினை வழங்கும் பிரதான நிறுவனமாகும். அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர், இணைப்பாளர்கள், வகுப்பாசிரியர், பாட ஆசிரியர், நூலக உதவியாளர், சிற்றூழியர்கள், காவற்காரர் போன்றோர் பாடசாலையை நடாத்திச் செல்வதற்குத் துணைபுரிபவர்களாவர்.

உங்கள் பிரதேசத்தின் பாடசாலைகளின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கான நிறுவனமாகச் செயற்படுவது வலயக் கல்வி அலுவலகமாகும். இந்த அலுவலகத்தில் கடமைபுரியும் அதிகாரிகள் தொடர்பான அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.



## ✶ போக்குவரத்துச் சேவை தொடர்பான அமைப்புகளும் அதிகாரிகளும்

இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கைப் புகையிரத சேவை, தனியார் போக்குவரத்துச் சேவை போன்ற அமைப்புகளினுடாக போக்குவரத்துச் சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த நிறுவனங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கீழ் இயங்குகின்ற பேரூந்து அமைப்பினையும் ஊழியர்களையும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காண்க.




## ✶ தகவல் பரிமாற்றுச் சேவை தொடர்பான நிறுவனங்களும் அதிகாரிகளும்

தபால் காரியாலயம் உங்களுக்கு அருகாமையிலுள்ள தகவல் பரிமாற்று சேவையினை வழங்கி வரும் ஒரு நிறுவனமாகும். நீங்கள் உபதபால் நிலையங்களிலோ, பிரதான தபால் நிலையங்களிலோ சேவையினை பெற்றவர்களாக இருப்பீர்கள். அந்தக் காரியாலயத்தின் சேவையாளர்களைக் கீழ்க் காணும் அட்டவணையிலிருந்து இனங்காண்க.

| உப தபால் நிலைய சேவையாளர்கள் | பிரதான தபால் நிலைய சேவையாளர்கள் |
|---|---|
| • அஞ்சல் அலுவலர்கள்<br>• தபாற்காரர்<br>• தந்திச் சேவகர்கள் | • பிரதான அஞ்சல் அலுவலர்கள்<br>• தபால் நிலைய அதிபர் (தரம் II)<br>• அலுவலக உதவியாளர்கள்<br>• தந்திச் சேவகர்கள் |




உரு 6.13 தபால் காரியாலயம்

## 6.7 அரசின் மூலமாக வழங்கப்படும் ஏனைய பொதுச் சேவைகள்

சுற்றாடல் பாதுகாப்புக்காக அரசின் மூலமாகப் பல்வேறு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வனப்பாதுகாப்புத் திணைக்களம், வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்றன சுற்றாடல் பாதுகாப்புக்காக இயங்கி வருகின்ற அரச நிறுவனங்களாகும். நீங்கள் வாழுகின்ற பிரதேசங்களின் சுற்றாடல் பாதுகாப்புக்காக இந்த நிறுவனங்கள் சேவை வழங்குகின்றமையை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவும் சுற்றாடல் பாதுகாப்பிற்காகப் பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றன. பொதுச் சேவையின் கீழ் அரசாங்கத்தினூடாகப் பல்வேறு சமூக பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துகின்றன. இந்தச் சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டங்களினால் நன்மையடைகின்ற மக்கள் உங்கள் பிரதேசத்திலும் இருப்பார்கள். வறுமை நிவாரண வேலைத்திட்டம், சமுர்த்தி வேலைத்திட்டம் என்பன ‘சமுர்த்த’ சமூகப்பாதுகாப்பு வேலைத்திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதைக் காணலாம். வறுமை நிவாரண வேலைத்திட்டத்தின் நோக்கமானது, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவி செய்வதேயாகும்.

வாழ்க்கையை நடாத்திச் செல்வதற்கும், வறுமை மட்டத்திலிருந்து மீள்வதற்கும் அரசாங்கத்தினூடாக சமுர்த்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2006 ஆம் ஆண்டிலிலிருந்து இலங்கையில் 'சமுர்த்தி' அதிகார சபையினூடாகக் கிராமங்களில் வசதிகளை மேம்படுத்தவென 'கிராம எழுச்சி' எனும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வீட்டுப் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு ''திரிய பியச'' வேலைத்திட்டமும் வருமானத்தை அதிகரித்து கொள்வதற்காக விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களில் ஒன்றான கூட்டுறவுச் சங்கமானது மிகவும் முக்கியமான நிறுவனமாகும். ''ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காகவும்'' என்ற கூற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதே கூட்டுறவுச் சங்கமாகும்.

✶ **கூட்டுறவுச் சங்கத்தினூடாகக் கிடைக்கப்பெறும் சேவைகள்**

- ❖ குறைந்தவிலையில் நுகர்வுப் பொருட்களை வழங்குதல்.
- ❖ கடனுதவி வழங்கல்.
- ❖ போக்குவரத்துச் சேவையினை வழங்கல்.
- ❖ வங்கிச் சேவையினை வழங்கல்.
- ❖ மரணச் சடங்கு சேவைகளை வழங்கல்.

கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாகக் கிடைக்கின்ற சேவைகள் சில மேலே தரப்பட்டுள்ளன. வாழ்க்கையில் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குக் கூட்டுறவுச் சங்கம் உதவுகின்றது.

## 6.8 பொதுச் சேவை நிறுவனங்களின் பொறுப்புகளும் கடமைகளும்

எங்களுடைய அன்றாட வாழ்க்கை நடைமுறைகளை மேற்கொள்வதற் காகவும், நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காகவும் பொதுச்சேவைகளில் கிடைக்கின்ற நன்மைகளை பெற்றுக் கொள்வதனை இப்பாடத்தினூடாக மிகவும் விரிவாகக் கற்றுக்கொண்டீர்கள். இந்தப் பொதுச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களின் பொறுப்புகளையும் கடமைகளையும் பின்வரும் அட்டவணையிலிருந்து கற்றுக் கொள்க.

| பொதுச் சேவை | பொதுச்சேவை வழங்கும் நிறுவனம் | பொறுப்புகளும் கடமைகளும் |
|---|---|---|
| நீர் | ✹ நீர் சேகரிப்பு, நீர் விநியோக சபை<br>✹ மாநகர சபை<br>✹ நகர சபை<br>✹ பிரதேச சபை | ✹ சுத்தமான குடிநீர் வழங்குதல்<br>✹ சீரான சேவையை வழங்குதல்<br>✹ கால தாமதமின்றிச் சேவை வழங்குதல்<br>✹ பாவனையாளரின் முறைப்பாடுகளுக்குத் தீர்வு வழங்குதல் |
| மின்சாரம் | ✹ இலங்கை மின்சார சபை | ✹ சீராக மின்சாரத்தை வழங்குதல்<br>✹ தேவையான அளவு மின்சாரத்தை வழங்குதல்<br>✹ மின் கம்பங்களை முறையாகப் பராமரித்தல்<br>✹ பாதுகாப்புகளுடன் மேற்கொள்ளல்.<br>✹ மக்களுடைய முறைப்பாடுகளுக்கு உடனடியாக தீர்வு காணுதல். |
| சுகாதார சேவை | ✹ தனியார் வைத்தியசாலை | ✹ நோயாளிக்கு முறையாகச் சிகிச்சையளித்தல்<br>✹ தொற்று நோய்களைத் தடுத்தல்.<br>✹ நோயாளிகளை பாதுகாத்து கொள்ளல்.<br>✹ சேவையைச் சீராக வழங்குதல். |
| கல்வி | ✹ தனியார் பாடசாலை | ✹ முறையாகக் கல்வியை வழங்குதல்.<br>✹ சமூகத்திற்கு ஏற்ற பிரஜைகளை உருவாக்குதல்.<br>✹ நிபுணத்துவ அபிவிருத்தியை மேற்கொள்ளல்.<br>✹ நல்லதொரு சமூகத்தை உருவாக்குதல்.<br>✹ சமூகத்தில் ஒன்றி வாழக்கூடிய பிரஜைகளை உருவாக்குதல். |
| போக்குவரத்து | ✹ இலங்கைப் போக்குவரத்துச் சபை<br>✹ இலங்கைப் புகையிரத சேவை<br>✹ தனியார் பேரூந்துச் சேவை | ✹ பயணிகளுக்கேற்ற பாதுகாப்பான சேவையினை வழங்குதல்.<br>✹ பயணிகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல்<br>✹ அர்ப்பணிப்புடனும் நீதியாகவும் சேவை செய்யக் கூடியவர்களை பயன்படுத்துதல்<br>✹ காலத்திற்கேற்ப சேவைகளை வழங்குதல் |
| தகவல் பரிமாற்ற சேவை | ✹ தபாற் திணைக்களம்<br>✹ ஸ்ரீ லங்கா ரெலிகொம்<br>✹ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்<br>✹ இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்<br>✹ பத்திரிகைகள் | ✹ செயற்றிறனான சேவைகளை வழங்கல்<br>✹ உண்மையான தகவல்களை வழங்கல்<br>✹ அனர்த்தங்கள் பற்றிச் சரியான தகவல்களை வழங்கல்<br>✹ பக்கச் சார்பின்றித் தகவல்களை வழங்கல் |

**அட்டவணை 6.1 பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள்**

## 6.9 பொதுச் சேவைகளினூடாகப் பயனடையும் பிரஜைகளின் கடமைகளும் பொறுப்புகளும்.

கல்விச் சேவையினை வழங்குவதற்காக 2006 ஆம் ஆண்டு அரசாங்கம் செலவழித்த தொகை ரூபா 78.3 பில்லியன் ஆகும். பொதுச் சேவையான கல்வியினை வசதியான முறையில் பெற்றுக்கொள்ளும் மாணவர்களாகிய நீங்கள் எவ்வாறான கடமைகளையும் பொறுப்புகளையும் கொண்டவர்களாக இருக்க வேண்டுமெனச் சிந்தித்துப் பாருங்கள்.

அந்த வசதிகளினூடாகப் பயன்பெற்று நாட்டினது நல்லதொரு பிரஜையாவது உங்களுடைய கடமையாக இருக்க வேண்டும். அந்த நோக்கத்தை அடைவதற்கு நன்றாகக் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாடசாலையின் வளங்களைப் பயன்படுத்துவது உங்களது உரிமையாகும். அதே வேளை அச்சொத்துகளைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும். பாடசாலையில் ஒழுக்கத்தையும், நீதியையும், நீங்கள் கடைப்பிடிப்பவர்களாக இருந்தால் அதிபர், ஆசிரியர், சகமாணவ மாணவிகளின் கௌரவத்தையும் நன்மதிப்பையும் பெற்றுக் கொள்வீர்கள். அதுபோன்று பொறுப்புடன் கல்வியைக் கற்று வருவீர்களானால் எதிர்காலத்தில் உங்களுடைய குடும்பத்திற்கும். சமூகத்திற்கும், நாட்டிற்கும் நல்லதொரு பிரஜையாக ஆகலாம்.

பொதுச் சேவையான வைத்திய சேவையினை அரசாங்கம் இலவசமாக வழங்குகின்றது. இதற்காக 2006 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் செலவிடப்பட்ட தொகை ரூபா 58 பில்லியன் ஆகும். உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் சிறந்த சுகாதாரத்தோடு காணப்படுகின்ற மக்களே நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமானவர்களாவர். சுகாதாரமான வாழ்க்கையினை வாழ நாம் இந்த வசதிகளைப் பயன்படுத்த வேண்டும். வைத்திய ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பது, நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பது, உடற்பயிற்சியினை செய்துவருவது, சுகாதாரமான உணவுகளை உட்கொள்வது போன்ற விடயங்களில் நாம் எப்போதும் கவனம் செலுத்த வேண்டும். எமது சூழலையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்துக் கொள்வோமாயின் தொற்று நோய்களை இலகுவாகத் தடுத்துவிட முடியும்.

நீர் மற்றும் மின்சாரத்தினைப் பயன்படுத்தும் பாவனையாளர்களாக நாம் இருந்தால் அதற்கான கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்தக் கடமைப்பாடுடையவர்களாவோம்.

நீர், மின்சாரம் போன்ற சேவைகளைப் பயன்படுத்தும் போது மிகவும் சிக்கனமாகவும், கவனமாகவும் பாவிக்கவேண்டும். இவ்வாறு செய்வதனூடாக தனிப்பட்டவர்களும் இலாபமடைவதோடு அதற்கான தேசிய உற்பத்திச் செலவினை மீதப்படுத்திச் சேமிப்பின் அளவினை அதிகரிக்க முடியும். இச்சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காக உபயோகிக்கப்படும் பொருட்களை அல்லது சாதனங்களைப் பாதுகாப்பது எமது கடமையும் பொறுப்புமாகும். சிலவேளையில் நீர், மின்சாரம் போன்ற பொதுச் சேவைகளை முறைகேடாகப் பாவிப்பவர்களை நீங்களும் கண்டிருப்பீர்கள்.

பொதுச்சேவைகளின் பெறுமதியை நன்றாக அறிந்துக் கொண்டு சட்டவிதிப்படி பாவிப்பது அனைவரினதும் பொறுப்பாகும். எமக்கு அத்தியாவசியமான பொதுச்சேவைகளைப் பெறுவதற்குக் கட்டணங்களைச் செலுத்தி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பேரூந்துப் போக்குவரத்து, புகையிரதப் போக்குவரத்து சேவைகள் தொடர்பான சொத்துக்களைப் பாதுகாப்பதன் மூலம் அந்த சேவைகளைத் தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் நடாத்திச் செல்ல உதவ வேண்டும்.

## 6.10 ஊடகம்

தகவல்களையும் செய்திகளையும் அறிந்துகொள்வதற்கு இன்றைய காலகட்டத்தில் பல்வேறு ஊடகங்களைப் பாவிப்பதற்குப் பழக்கப்பட்டுள்ளோம். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் என்பன பிரதான மானவையாகும். இவற்றை ஓய்வு நேரங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும் விடயங்களையும் தகவல்களையும் அறிந்து கொள்வதற்கும், கல்வித் தேவைக்கும் பாவிப்பதற்கு நாங்கள் பழக்கப்பட்டிருக்கின்றோம். இந்த ஊடகங்களின் மூலம் வெளியிடப்படும் தகவல்களுள் மேற்குறிப்பிட்ட விடயங்களைப் பெற்றுக் கொள்ள அவசியமானவற்றைத் தெரிவு செய்வதில் நாம் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

### செயற்பாடு

- நீர் மற்றும் மின்சாரப் பாவனையாளர் என்ற ரீதியில் அந்தச் சேவைகளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு வீட்டில் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை கீழ் உள்ள அட்டவணையில் பூரணப்படுத்துக.

| பொதுச் சேவை | வீட்டில் சிக்கனமாக இச்சேவைகளைப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் |
|---|---|
| நீர் | 1<br>2<br>3<br>4<br>5 |
| மின்சாரம் | 1<br>2<br>3<br>4<br>5 |

❖ பொதுச் சேவைகள் தொடர்பாக கீழ்க்காணும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| பொதுச் சேவை | வழங்கும் நிறுவனம் | பொதுச் சேவை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் |
|---|---|---|
| நீர் | | |
| மின்சாரம் | | |
| போக்குவரத்து | | |

❖ உங்கள் பிரதேசத்தில் அமைந்துள்ள விவசாய மத்திய நிலையத்தினதும் கூட்டுறவுச் சங்கத்தினதும் தகவல்களைக் கீழ்க் காணும் தலைப்புகளில் சேகரியுங்கள்.

1. அதிகாரிகள்
2. வழங்கப்படும் சேவைகள்
3. அந்த நிறுவனங்கள் உங்கள் பிரதேச விருத்திக்கு உதவும் விதம்

♦ உங்கள் பிரதேசத்திற்கு அவசியமான பொதுச்சேவைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றை மேலும் விருத்தி செய்வதற்கு உங்களது ஆலோசனைகளையும் தருக.

| சேவைகள் | விருத்தி செய்வதற்கான ஆலோசனைகள் |
|---|---|
| 1 ___________ | 1 _______________<br>2 _______________<br>3 _______________ |
| 2 ___________ | 1 _______________<br>2 _______________<br>3 _______________ |

❖ மின்சாரம் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் இடை நிறுத்தப்பட்டால் குறித்த பிரதேசத்தில் வசிக்கும் நீங்கள் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகளைப் பட்டியற்படுத்துக.

## சாராம்சம்

- ❖ மக்களுக்காகப் பொதுவாக வழங்குகின்ற சேவை பொதுச்சேவை எனப்படும்.
- ❖ மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை விருத்தி செய்வதற்குப் பொதுச்சேவை அவசியமாகும்.
- ❖ நீர், கல்வி, சுகாதாரம், மின்சாரம், தகவல்பரிமாற்றம், போக்குவரத்து என்பன மிகவும் அத்தியாவசியமான பொதுச்சேவைகளில் சிலவாகும்.
- ❖ பொதுச்சேவைகளை விதிமுறையாக வழங்குவது அச்சேவையினை வழங்கும் நிறுவன அதிகாரிகளின் பொறுப்பும் கடமையுமாகும்.
- ❖ பொதுச்சேவைகளைப் பயன்படுத்துபவர்களாகிய நாம் எமது கடமையையும் பொறுப்பையும் செயல்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.
- ❖ பொதுச்சேவையினை வழங்குபவர்களைப் போல் பாவனையாளர்களும் தமது பொறுப்புகளையும், கடமைகளையும் ஒழுங்காகச் செயற்படுத்துவதன் மூலம் மிகவும் சிறப்பான பொதுச்சேவைகளைச் செயற்படுத்தச் சந்தர்ப்பம் ஏற்படும்.

## ஒப்படை

பொதுச் சேவைகளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம் என்ற தலைப்பில் சுவரொட்டியொன்றைத் தயாரிப்போம்.